Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 300

வெள்ளிக்கிழமை 22 செப்ரெம்பர் 2023



# திலீபனை நினைவேந்த தடைகோரி மீண்டும் மனு

## யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுத் தாக்கல்

## கொழும்பில் இருந்து வந்த குழு நீண்ட ஆட்சேபனை

## இன்று நண்பகல் நீதிமன்றின் கட்டளை வெளியாகும்

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22**

**யாழ்ப்பாணத்தில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடைகோரி நேற்று மீண்டும் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்துவந்த விசேட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்டமா திணைக்களப் பிரதானிகளின் நீண்ட நேரக் கலந்துரையாடல்களின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.** »11



## ஈஸ்டர் தாக்குதல்களில் மைத்திரியும் சூத்திரதாரியே!

### போட்டுத் தாக்குகிறார் பொன்சேகா

கொழும்பு, செப். 22

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவர் கோத்தாபய ராஜபக்ச. மற்றையவர் மைத்திரிபால சிறிசேன என்று நாடாளுமன்றத்தில் பரபரப்பானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் ஐக்கிய »11

## 'திலீபன் தியாக தீபமாக' ஆவணக்காட்சியகம் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 22

தியாகதீபம் திலீபனின் வாழ்வையும் வரலாற்றையும் தியாகத்தையும் பறைசாற்றும் விதமாக ஆவணக் காட்சியகமொன்று இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவுத் தூபிக்கு முன்பாக திறந்துவைக்கப் படவுள்ளது.

தன் உயிரிலும் மேலாகத் தான் நேசித்த மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் தியாகங்களைப் புரிந்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் »11

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு!



வவுனியா, செப். 22

வவுனியா, தோணிக்கல் லக்ஸபான வீதியில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுவிஸ் நாட்டில் வசித்து வந்த நிலையில், விடுமுறைக்காகத் »11

### வடமாகாண அபிவிருத்திகளுக்கு உலகவங்கி முழு ஒத்துழைப்பு!

அதன் பணிப்பாளர் வாக்குறுதி

கொழும்பு, செப். 22

வடக்கு மாகாணத்தின் கல்வி, விவசாயம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்று உலக வங்கியின் பணிப்பாளர்களில் ஒருவரான பாரிஸ் ஹடாட்ஜேர்வோஸ் தெரிவித்துள்ளார். »11

தீவிரமாகும் மருத்துவ நெருக்கடி

## சுகாதாரத்துறையினர் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 22

இலங்கையில் நாளுக்குநாள் மருத்துவப் பெருநெருக்கடி தீவிரமாகிவரும் நிலையில், சுகாதார சேவைகள் தொழிற்சங்கமும் இதர சில தொழிற்சங்கங்களும் இணைந்து நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தன. »11

## போதைப்பொருள்களுடன் நால்வர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், செப். 22

உயிர்கொல்லிப் போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்தவர்கள் உட்பட நால்வர், யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் »11

வவு. இரட்டைக்கொலை

## ஒருவர் அடையாளம் மூவருக்கு பிடியாணை

வவுனியா, செப். 22

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 6 பேரில் ஒருவர் அடையாள அணிவகுப்பின்போது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தலைமறைவாகி »11

### தரம் ஒன்று மாணவர்களுக்கு பொறுப்பான ஆசிரியர் இல்லை

பெற்றோர் போராட்டம்

கிளிநொச்சி, செப். 22

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இலக்கம் 02 பாடசாலையில் தரம் ஒன்று வகுப்பு மாணவர்களுக்கு பொறுப்பு வாய்ந்த ஆசிரியரை நியமிக்குமாறு கோரி மாணவர்களின் பெற்றோர் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்ததாவது:- »11

உள்ளூராட்சித் தேர்தல்

## வேட்புமனுக்கள் விரைவில் ரத்து

கொழும்பு, செப். 22

உள்ளூராட்சித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. »11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திய வங்கியின் செயலால் முழு நாடும் தோல்வியுற்றது!

## வஜிர எம்.பி. கூறுகின்றார்

**கொழும்பு, செப்.22**

**மத்திய வங்கி நிதி வங்குரோத்து நிலையை அறிவித்ததால் முழு நாடும் தோல்வியடைந்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழு கூடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி மற்றும் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்த கருத்துகள் தொடர்பில் இதன்போது வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த வஜிர தெரிவித்ததாவது-

அரசமைப்பின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு நாடாளுமன்றத்துக்கு காணப்படுகின்றது. பிழையான முறையொன்றுக்கு அமைய இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மத்திய வங்கியால் இந்த நாட்டில் நிதி வங்குரோத்து நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. அதனால் முழு நாடும் அசௌகரியத்துக்குட்பட்டது.

விசேடமாக 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 3.9 பில்லியன் டொலர் செலுத்த வேண்டி இருந்தது. 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி 3.2 பில்லியன் டொலர் செலுத்தியிருந்தது. ஏப்ரல் 12ஆம் திகதிவரை சுமார் 70 மில்லியன் டொலர் சீனாவுக்கு செலுத்தவேண்டி இருந்தது. ஏப்ரல் 12 ஆம் திகதி எந்தவொரு விவரமும் இல்லாமல் மத்திய வங்கியால் நிதி வங்குரோத்து நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது.

இது பிழையான செயற்பாடு. இது நடந்திருக்கக் கூடாது. தனியாரின் உதவியுடன் அந்தக் கடனைச் செலுத்த முடியுமாக இருந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு மத்திய வங்கியின் அதிகளவான அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும். ஒரு சிலர் இந்த நிலையில் இலங்கைக்குச் சார்பாக இருக்கவில்லை - என்றார். (ஏ-44)

# உயர்தரப் பரீட்சை மீள ஒத்திவைப்பு!



கொழும்பு, செப்.22

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமான நிலையில், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான புதிய திகதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதா அல்லது அந்தத் தினத்தில் நடத்துவதா என்பது தொடர்பில் விசேட அறிக்கையொன்று நேற்று வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த விடயத்தைத் தெரிவித்திருந்தார். 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்துவதற்கு முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-இ)

# தனுஷ்கவின் வழக்கு: தீர்ப்பு 28 ஆம் திகதி

சிட்னி, செப். 22

இலங்கைக் கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 28ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

சிட்னி நகரின் டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் குணதிலக்க மீதான வழக்கு விசாரணையின் விசேட அமர்வு செப்ரெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமானது.

இதில் தனுஷ்க குணதிலக்க மற்றும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்ணும் முன்னிலையாகி சாட்சியம் அளித்தனர்.

குணதிலக்கவுக்கு எதிராக ஆரம்பத்தில் நான்கு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டபோதும் அதில் மூன்று குற்றச்சாட்டுகள் நீக்கப்பட்டுள்ளன. அந்தப் பெண்ணின் விருப்பத்துக்கு எதிராக பாலியல் உறவில் ஈடுபட்ட குற்றச்சாட்டு மாத்திரம் அவர் மீது நீடிக்கின்றது.

இதில் பாலியல் தாக்குதலுக்கு இலக்கானதாக கூறப்படும் பெண், ஆணுறை அணியாமல் பாலியல் உறவில் ஈடுபடுவதற்கு தாம் ஏமாற்றப்பட்டதாகவும், அந்தத் தருணத்தில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சியதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஆண்டு இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத்துக்காக இலங்கை அணியுடன் சென்றபோது குணதிலக்க மீது இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

நீதிபதி சாரா ஹூக்கட் முன்னிலையில் இடம்பெற்றுவந்த வழக்கில் சாட்சி விசாரணை, நேற்றுடன் நிறைவுபெற்றது.

இதன்படி, வழக்கு விசாரணையின் தீர்ப்பு எதிர்வரும் வியாழக்கிழமை வழங்கப்படும் என நீதிபதி சாரா ஹூக்கட் தெரிவித்துள்ளார். (இ-44)

# குளவி கொட்டி மாணவர்கள் பாதிப்பு



கொழும்பு, செப்.22

குளியாப்பிட்டியவில் உள்ள பாடசாலையொன்றில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 20 மாணவர்கள் மற்றும் பெற்றோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைக்கு அருகிலுள்ள மரமொன்றிலிருந்த குளவிக் கூட்டைப் பருந்து தாக்கியதால் அதிலிருந்து கலைந்த குளவிகள் மாணவர்களையும், பெற்றோரையும் கொட்டின என்று கூறப்படுகின்றது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அம்புலன்ஸில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். குளவிக் கூட்டை அகற்றும் நடவடிக்கைகளை குளியாப்பிட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் முன்னெடுத்தனர். (ஏ-இ)

# மயிலிட்டி கண்ணகாதேவி ஆலய அபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம், செப். 22

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை ஸ்ரீ கண்ணகாதேவி ஆலயத்தின் பிராயச்சித்த அபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் இடம்பெறவுள்ளது.

கிரியைகள், விசேட பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். தொடர்ந்து அன்னதானமும் இடம்பெற உள்ளது. (ச-100)

# புதையல் தோண்டியோர் மறியலில்!

பசறை.தொலும்புவத்த பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 7 பேர் பதுளை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி பசறை, தொலும்புவத்த 4ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்கு அருகில் உள்ள காணியில் புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். பசறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியரத்ன ஏக்கநாயக்க உள்ளிட்ட குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்தனர். (ஏ-இ)



# துப்பாக்கிச் சூட்டில் இருவர் சாவு

அவிசாவளை இஹல தல்துவ, குருபஸ்கொட பகுதியில் இருவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்தவர்களை இலக்குவைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த நால்வரும் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளனர். அவர்களில் இருவர் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் தல்துவ பகுதியைச் சேர்ந்த 27, 36 வயதானவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

டுபாயில் தலைமறைவாகியுள்ள மன்னா ரமேஷ் என்ற பாதாளக் குழு உறுப்பினரே இத்தாக்குதலை வழிநடத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. (ஏ-44)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு களப்பரிசோதனை

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தின் களப்பரிசோதனைகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, மறுநாள் புதன்கிழமை மற்றும் 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் இந்தக் களப் பரிசோதனைகள், தெரிவு செய்யப்படும் கிராமஅலுவலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதேச செயலக அலுவலர்கள், சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், உள்ளூராட்சி சபையினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுக்களாக களப் பரிசோதனையில் ஈடுபடவுள்ளனர். களப்பரிசோதனையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்களை [illegible] குடியிருப்பாளர்கள் மற்றும் காணிகளை பராமரிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

களப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் பிரிவுகள் முதல்நாள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும்.

பிரதேச மக்கள் தமது பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்களை துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றத்தை விசாரிக்க சர்வதேச நீதிப்பொறிமுறை!

## வடக்கு, கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழு வலியுறுத்து



**யாழ்ப்பாணம், செப். 22**

**இலங்கையில் இறுதிப்போரில் நடந்த போர்க் குற்றங்களை விசாரிக்க உடனடியாக சர்வதேசப் பொறிமுறை ஒன்றை ஐ.நா. உருவாக்க வேண்டும் என்று வடக்கு, கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பான மனுவை நேற்று அந்தக் குழு யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் கையளித்தது.**

போர் முடிந்து 14 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையை நிறுவி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும், போர்க்குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தி தண்டனை வழங்கவும் இலங்கை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இறுதிப் போரில் இலங்கை அரசாங்கம் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் விழுமியங்களை முற்றாகப் புறக்கணித்தது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையின்படி இறுதிப்போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. அரச படைகளிடம் சரணடைந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். அண்மையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் மனிதப்புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பது ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மைப் பணியாக இருக்கின்றது. போர்க் குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதிப்பொறிமுறையை நிறுவுவதற்கு ஐ.நா. இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என்று கோருகின்றோம் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-20)

# கைது

யாழ்ப்பாணம், செப். 22

ஒன்றரை லீற்றர் கசிப்புடன் ஒருவரைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையில் கைதுசெய்யப்பட்ட, 42 வயதான குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். (ஓ-125)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 22

உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்னுடன் தொடர்பான சந்தேகத்தில் இளைஞரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மானிப்பாய் கட்டுடையில் இளைஞன் உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 35 மில்லிகிராம் ஹெரோய்னுடன் இளைஞனைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-125)



# ஆனைக்கோட்டையில் பேருந்துக்குத் தீவைப்பு

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை சாவற்காட்டில் 'டாடா' ரக வெள்ளைப் பேருந்து தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

பேருந்து உரிமையாளரின் வீட்டின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஓ-20-125)

# மனிதஉரிமைகள் மதிக்கப்படவேண்டும்

## மன்னாரில் கவனவீர்ப்பு




ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசு ஒப்புக்கொண்டு நீண்ட காலங்களாகியும் அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்தவில்லை. உண்மையைக் கண்டறிதல் நீதி மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில் மிகுந்த கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பதுடன் மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டமொன்று மன்னார் மாவட்ட சிவில் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்டது.

உலக சமாதான நாளான நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை மன்னார் மாவட்டச் செயலகத்தின் முன்பாக அமைதியான வழிமுறையில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. (ஓ-60)




வருசக்கணக்கா ஜெயிலுக்குள்ள இருக்கிற அரசியல்கைதியளை விடுவிக்கிறதுக்கும், அவையின்ர வழக்குகளை விசாரிக்கிறதுக்கும் ஆயிரத்தெட்டு நொண்டிச்சாட்டு சொல்லுற சட்டமா அதிபர் திணைக்களம், திலீபன்ர நினைவேந்தலைத் தடுக்கோணும் எண்டதுக்காக ஹெலி பிடிச்சு கொழும்பில இருந்து யாழ்ப்பாணத்துக்கு தன்ர அதிகாரிகளை அவசர அவசரமா நேற்று அனுப்பி வைச்சிருக்குது. நாலு பொலிஸ் பெரியாக்களும் அவையோட வந்தவை.

வந்ததும் வராததுமா உடனேயே அவை யாழ்ப்பாணப் பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போய், மூடின அறைக்குள்ள இஞ்சத்தை பொலிஸ் உயர் அதிகாரிமாரை இந்தக் குழு மூண்டு மணித்தியாலத்துக்கு கிட்ட சந்திச்சு, கதைச்சது. அது முடிஞ்சபிறகு யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு இந்தச் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரியளும், பொலிஸ்காரரும் கொண்ட குழு போயிருக்கு.

திலீபன்ர நினைவேந்தலைத் தடை செய்யவேணும் எண்டு பொலிஸ் போட்ட வழக்கை, யாழ்ப்பாணம் கோர்ட்ஸ் நிராகரிச்சிருந்தது. ஆனால் இது அரசாங்கத்துக்கு பிடிக்கேலை. அதாலதான் உடனடியா சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரியளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைச்சது. அந்தக்குழு 'நினைவேந்தலுக்கு தடை போட்டே ஆகவேணும்' எண்டு திரும்ப இன்னொரு புது வழக்கைப் போட்டு, விசாரணைக்கு எடுக்கச் சொல்லி கேட்டிருக்கு. அதின்படி இந்த வழக்கை திரும்ப விசாரிச்சு, 'நினைவேந்தலை நடத்திறதா? இல்லையா?' எண்டு இண்டைக்கு கோர்ட்ஸ் கட்டளை பிறப்பிக்கப் போகுது. நேற்றும் கோர்ட்ஸில இந்த நினைவேந்தலை ஏன் தடை செய்ய வேணும்? எண்டதுக்கு தங்கட பக்க ஆதாரமா சில விசயங்களை வீடியோவில நீதிபதியின்ர கவனத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களமும், பொலிஸ்காரரும் கொண்டு வந்தவை. அதிலை ஒண்டு, திலீபன்ர நினைவூர்தி வரேக்க, வுவுனியாவில நடந்த சம்பவம்.

இந்த ஊர்தி வவுனியாவால வரேக்க, ஒரு பொலிஸ்காரர் சிவில் உடுப்போட நிண்டு வீடியோ எடுத்து மிரட்ட, முன்னணிக்காரருக்கு கோபம் வந்திட்டு. உடனேயே அவை அந்தப் பொலிஸ்காரரோட சண்டைக்குப் போய், மினி வீடியோக் கமெராவைப் பறிச்சு, அதில உள்ள வீடியோக்களை அழிச்சிருக்கினம். இப்பிடி இவை பொலிஸோட சண்டை பிடிக்கிறதையும், கமெராவைப் பறிச்சு வீடியோவை அழிக்கிறதையும் இன்னொரு போனில வீடியோ எடுத்து, அதை நேற்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில பொலிஸ்காரர் காட்டியிருக்கினம். 'இப்பிடியெல்லாம் வன்முறையைத் தூண்டுற நினைவூர்திக்கும், நினைவேந்தலுக்கும் தடை போடவேணும்' எண்டு பொலிஸ்காரர் விடாப்பிடியா நிண்டிருக்கினம். இந்த வழக்கில தீர்ப்பு எப்பிடி வந்தாலும் இதில இருந்து ஒரு பாடத்தை நாங்கள் படிக்கவேணும். பொலிஸ்காரரோ, ஆமியோ போனிலயோ, கமெராவிலையோ வீடியோ எடுக்கிற மாதிரி மிரட்டினால் அதைக் கண்டும் காணாமல் வந்திடவேணும். அப்பிடியில்லாமல் அவங்கள் உசுப்பேத்துறாங்கள் எண்டதுக்காக நாங்களும் திருப்பி எங்கட வீரத்தைக் காட்டுறம் எண்டு ஏடாகூடமா ஏதும் செய்தால், அது அவங்களுக்குத்தான் வசதியாப் போடும். அதைத்தான் இப்ப வவுனியாவில எடுத்து, கோர்ட்ஸூக்கு குடுத்த வீடியோவும் காட்டுது. நாய் குரைக்குதெண்டு நாங்களும் திருப்பிக் குரைச்சால் இப்பிடித்தான்.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘உலகத்தில் உணவு நெருக்கடியைத் தவிர்த்தல்’

## கிளிநொச்சியில் மாநாடு



யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் "நவீன உலகத்தில் உணவு நெருக்கடியைத் தவிர்த்தல்" என்ற தொனிப்பொருளில் 9ஆவது உலர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மைப் பேச்சாளராக ஜப்பான் - நகோயா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கோஷ கலந்துகொண்டு உரையாற்றினார். யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி எஸ். வசந்தரூபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், விவசாயத் திணைக்களங்களின் உயரதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய-27)

# சர்வதேச விசாரணை வேண்டும்

## – கோருகிறார் ஹக்கீம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். எனவே, சர்வதேச கண்காணிப்புடன் விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதைய தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல மர்மங்கள் உள்ளன. விசாரணைகள் தொடர்பிலும் சர்ச்சைகள் உள்ளன.

புலனாய்வுப் பிரிவு செயற்பட்டுள்ள விதம் குறித்தும் சந்தேகம் உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமெனில் உண்மை கண்டறியப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களை அமைத்து காலத்தை இழுத்தடிக்கக்கூடாது. சர்வதேச கண்காணிப்புடன் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

ஆகவே, மேற்படி தாக்குதல் சம்பவத்தின் பின்புலம் கண்டறியப்பட வேண்டும். அதற்குத்தான் நாம் தயாராக வேண்டும் - என்றும் ஹக்கீம் குறிப்பிட்டார். (ஒ-44)

# நாகதம்பிரான் ஆலய மஹோற்சவம் ஆரம்பம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார மஹோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாம்புத் திருவிழாவும் மறுநாள் 30ஆம் திகதி சனிக்கிழமை கப்பல் திருவிழாவும் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரத் தீர்த்தமும் 4 ஆம் திகதி புதன்கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (ச-100)

# ஆங்கிலதின நிகழ்வுகள் கலாசாலையில் இன்று

யாழ்ப்பாணம், செப். 22

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்தும் நூற்றாண்டு கால ஆங்கில தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதா, சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், கௌரவ விருந்தினராக கலாசாலையின் முன்னாள் ஆங்கிலத் துறை விரிவுரையாளர் திருமதி எம்.ஜே.எஸ். முத்துக்குமாரசாமி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் ஆங்கில தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ச-66)

## தெல்லிப்பழைப் பிரதேசத்தில்

# திங்கட்கிழமை முதல் டெங்குச் சோதனை!

தெல்லிப்பழை, செப். 22

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அனைத்து கிராம அலுவலர் பிரிவிலும் டெங்குக் கட்டுப்பாட்டுக் களப்பரிசோதனைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. சகல கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள பொதுமக்களின் வசிப்பிடங்கள், அரச நிறுவனங்கள், மத வழிபாட்டுத் தலங்கள், திருமண மண்டபங்கள் உட்பட்ட அனைத்து இடங்களும் இதன்போது பரிசோதிக்கப்படவுள்ளன. களப்பணி பரிசோதனை மேற்கொள்ளப்படும்போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் காணப்படின் குடியிருப்பாளர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பொழுதுபோக்கு மற்றும் மனம் மகிழும் நிகழ்ச்சிகள் நிரம்பிய நாள். புதிய ஒப்பந்தங்கள் கவர்ச்சிகரமாகத் தோன்றலாம். பணம் முதலீடு செய்வதாக இருந்தால் அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம்.

**இடபம்:** பணிவான நடத்தை பாராட்டப்படும். பலர் உங்களை வாயார பாராட்டுவார்கள். விரைவாக பணம் சம்பாதிக்கும் ஆசை இருக்கும். உங்கள் அறிவும், நகைச்சுவையும் உங்களைச் சுற்றியுள்ளவர்களை ஈர்க்கும்.

**மிதுனம்:** சில பின்னடைவுகள் ஏற்படலாம். மனம் உடைந்துவிட வேண்டாம். ஆனால் எதிர்பார்க்கும் முடிவு கிடைப்பதற்காக கடினமாக உழையுங்கள். பாதுகாப்பான முதலீட்டில் முதலீடு செய்தால் நல்ல பணம் சம்பாதிக்கலாம்.

**கடகம்:** நல்ல வாழ்வுக்காக உங்கள் உடல்நலனையும் ஆளுமையையும் அதிகரிக்க முயற்சி செய்யுங்கள். இன்று உங்கள் பணம் சேமிக்கும் முயற்சியில் வெற்றிபெற மாட்டீர்கள்.

**சிம்மம்:** உடல் நலமின்றி இருக்கும் உறவினரை போய்ப் பாருங்கள். உங்கள் வேலை இன்று பலரும் பாராட்டும் வகையில் இருக்கும். சரியான நேரத்தில் ஓடுவதோடு, அன்புக்குரியவர்களுக்கு நேரம் கொடுப்பதும் அவசியம்.

**கன்னி:** உங்கள் நகைச்சுவை உணர்வுதான் மிகப் பெரிய சொத்து. உங்கள் நோயை குணமாக்க அதைப் பயன்படுத்துங்கள். இன்று நீங்கள் கடன் பெறலாம். உங்கள் இடைவிடாத உழைப்பு இன்று நற்பலன்களை தரும்.

**துலாம்:** இன்று உங்கள் உடல் நலம் பற்றி கவலைப்படத் தேவையில்லை. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உங்கள் நம்பிக்கையையும் எண்ணத்தையும் ஊக்குவிப்பார்கள்.

**விருச்சிகம்:** வாழ்க்கையை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள், வாழ்வில் அக்கறை காட்டுவதே உண்மையான சவால் என உணருங்கள். நிலைமை மேம்படும். நீங்கள் நேசிப்பவருக்கு பரிசுகள் கொடுக்கவும்.

**தனுசு:** தந்தை சொத்தை தர மறுக்கலாம். ஆனால் மனதால் தளர்ந்துவிடாதீர்கள். இன்று நீங்கள் மது போன்ற போதை பொருள்கள் எடுத்து கொள்ள கூடாது. விலை உயர்ந்த பொருள்கள் தொலைந்து போகும்.

**மகரம்:** வழக்கத்தைவிட சக்தி குறைவாக இருப்பதை உணர்வீர்கள் கூடுதல் வேலையை இழுத்துப் போட்டுக் கொள்ளாதீர்கள். வேறொரு நாளுக்கு தள்ளிப் போடுங்கள்.

**கும்பம்:** பொழுது போக்கு மற்றும் மனம் மகிழும் நிகழ்ச்சிகள் நிரம்பிய நாள். இன்று, நெருங்கிய நண்பரின் உதவியுடன், சில தொழிலதிபர்கள் நிறைய பணம் சம்பாதிக்க வாய்ப்புள்ளது.

**மீனம்:** உங்கள் யோசனையைக் குறைக்க குடும்பத்தினரின் ஆதரவைப் பெறுங்கள். உதவிகளை நன்றியுடன் பெற்றுக் கொள்ளுங்கள். அடிக்கடி பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வது உங்களுக்கு உதவும்.

# தியாகதீபம் நினைவாக நல்லூரில் குருதித்தானம்

யாழ்ப்பாணம், செப். 22

தியாகதீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவிட முன்றிலில் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-66)

# சமுர்த்தி ‘சிசுவல’ வில் கற்றல் உபகரணங்கள்

சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்கு சமுர்த்தி ‘சிசுவல’ திட்டத்தில் கற்றல் உபகரணங்கள் தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி வங்கிகளில் நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டன. சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய சமுர்த்தி உத்தியோகத்தர்களால் சமுர்த்திப் பயனாளிகளிடம் சேகரிக்கப்பட்ட நிதியில் சுமார் 783 மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலுக்கானதல்ல நினைவேந்தல்

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. மக்கள் பெரும் கூட்டமாக இல்லாவிடினும் ஓரளவுக்காவது அணி திரண்டு தங்கள் அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர். நினைவேந்தல்களும் ஒரு அரசியல்தான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அந்த நினைவேந்தல்கள் ஊடாக அடுத்த தலைமுறைக்கு வரலாறுகள் மாத்திரமல்ல, நினைவேந்தலுக்கான செய்தியும் கடத்தப்படவேண்டும். ஆனால் நினைவேந்தலுக்காக அரசியல் இருக்கலாமே ஒழிய அரசியலுக்காக நினைவேந்தல் மாறிவிடக்கூடாது. தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை முடக்க சிறிலங்கா அரசாங்கம் தலையால் கிடங்குகிண்டிக்கொண்டிருக்கின்றது. புலனாய்வாளர்களைக் களமிறக்கி – சிங்கள மக்களைத் தூண்டி நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. நினைவுத் தூபியுடன் வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் நீதிக் கட்டமைப்பு ஊடாகத் தடையுத்தரவைப் பெற்றுக் கொள்வதற்குப் பொலிஸார் பிரயத்தனம் மேற்கொண்டிருக்கின்றனர்.

முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தடையுத்தரவுக்காக வழக்குத் தொடுத்திருந்தனர். வடக்கிலிருக்கும் முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் நீதிமன்றங்கள் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்திருக்கின்றன. கொழும்பில் மாத்திரம் தடையுத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. இவையும் இந்த நாட்டில் தெளிவான பிரிகோட்டை வரைந்திருக்கின்றன. இந்த நாடு இரண்டு தேசங்களாக இருக்கின்றது என்பதை உணர்த்தும் வகையில் அமைந்திருக்கின்றன என்று கூடச் சொல்லமுடியும்.


இவ்வாறானதொரு நிலைமையில் இவ்வளவு தடைகளைத் தாண்டி கடைப்பிடிக்கப்படும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இறுதி நாள் நிகழ்வை தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக எவரும் சிதைத்துவிடக்கூடாது. பொது அமைதிக்குப் பங்கம் என்று நீதிமன்றப் படியேறிய பொலிஸாருக்கு, நாமே பிடி கொடுத்துவிடவும் கூடாது. கடந்த ஆண்டு நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியில் இறுதி நாள் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட குழப்பம் மக்களை முகம் சுழிக்க வைத்தது. அரசியல் போட்டியில் அல்லது அரசியல் காழ்ப்புணர்வில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை சிலர் கொச்சைப்படுத்தியிருந்தனர். அங்கு முன்னாள் மூத்த போராளிகள் பலரும் கருத்துரைக்க முற்பட்டபோதும் அவர்கள் அங்கு அவமானப்படுத்தப்பட்டனர். இதன் பின்னர் அவர்களும் அமைதியாகிவிட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மீது அனைத்து தமிழ்த் தேசியத் தரப்புகளால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. நினைவேந்தல்களைக் கடைப்பிடிப்பதற்குத் தமக்கு மாத்திரமே அருகதை – தகுதி – உரிமை இருப்பதாக அந்தக்கட்சி சொல்லிக்கொள்கின்றது. அதற்கு அவர்கள் கூறும் காரணம் விநோதமானது. 13ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் அவர்கள் எப்படி அந்த ஒற்றையாட்சிக் கொள்கைக்கு எதிராக உணவுத்தவிர்ப்புப் போராட்டம் நடத்திய திலீபனின் நினைவேந்தலை நடத்தமுடியும் என்பதுதான் கேள்வி. ஆனால், எந்தவொரு தமிழ்த் தரப்பும் 13 ஆவது திருத்தத்தை முடிந்த முடிவாக ஏற்கவில்லை. அதனை ஆரம்பப் புள்ளியாகவே ஏற்றுக்கொள்கின்றன. அதில் பல முரண்பாடுகள் இருக்கலாம். இதே காரணத்தை முன்வைக்கும் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் கூட, நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்கும் போது இலங்கையின் அரசமைப்பைப் பாதுகாப்பேன், ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன் என்றுதான் உறுதியுரை எடுத்துக்கொண்டனர். அதற்காக அவர்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியாதோ அதேபோலத்தான், 13ஆவது திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொண்ட கட்சிகளையும் ஒற்றையாட்சியை ஆதரிக்கின்றார்கள் என்று கூறமுடியாது.

எனவே, நினைவேந்தலில் அரசியல் செய்வதை முன்னணி கைவிடவேண்டும். நினைவேந்தலுக்கான அரசியலை அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து முன்னெடுக்கவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்
– இங்கர்சால்




# ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்: ஏற்க மறுக்கிறார் மைத்திரி

கொழும்பு, செப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தன்மீது முன்வைத்த குற்றச்சாட்டுகளை சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன முற்றாக நிராகரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கிடையில் கடும் சொற்போர் இடம்பெற்றது. அவ்வேளையிலேயே பொன்சேகா கூறுவது பொய் என மைத்திரி குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

'அப்பட்டமான பொய்களையே இவர் (பொன்சேகா) கூறினார். அவர் இராணுவத் தளபதியாக இருந்தபோது ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரையில் எமது இளைஞர்கள் ஒரே தடவையில் உயிரிழந்தனர். இதுபற்றி அவர் கதைப்பதில்லை. இராணுவத்தளபதியாக இருந்து, அவரால் இராணுவத் தலைமையகத்தைக்கூட பாதுகாக்கமுடியாமல்போனது. அவரை ஒரு வாகனத்திலும், அவரின் வயிற்றுப் பாகங்களை மற்றுமொரு வாகனத்திலுமே கொண்டுசெல்ல நேரிட்டது. இப்படியானவர் தேசியப் பாதுகாப்பு பற்றி கதைக்கின்றார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருந்தது. அது ஒரு தலைபட்சமாகவே செயற்பட்டது- என்றார் மைத்திரி. (ஒ-44)

## 'மீண்டெழும் பார்த்தீபம்' மாணவர் அரங்கு நேற்று

யாழ்ப்பாணம், செப்.22

"மீண்டெழும் பார்த்தீபம்" மாணவர் அரங்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. கைலாசபதி அரங்கில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

"திலீபனின் கோரிக்கைகளும் யதார்த்தமும்" எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கத்தின் உரையும், "நினைவெழுச்சி மாற்றத்துக்கான திறவுகோல்" எனும் தலைப்பில் கலைப்பீட நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் உரையும் இடம்பெற்றன. (எ-125, 66)



## திலீபனின் வரலாற்றை ஊடுகடத்த பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், செப்.22

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தியாகதீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டத்தில் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அடுத்த கட்ட சந்ததிக்கு வரலாற்றை எடுத்துச் செல்லும் முகமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தியாகதீபத்தின் வரலாறு உள்ளடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (எ-125,66)

| நாளை | 23.09.2023<br>சனிக்கிழமை<br>புரட்டாதி 06 | சுபநேரம் : 03.02 – 04.32<br>ராகுகாலம் : 09.02 – 10.32 |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மின்கட்டணத்தைக் குறைக்கத் திட்டம்



## எரிசக்தி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, செப்.22

**நாட்டின் 70 சதவீத மின்சாரத் தேவையைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி, மின் கட்டணத்தைக் குறைக்கத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2019 ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. தற்போது, கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்கலங்களின் ஊடாக 685 மெகாவோட் மின்சாரமும், நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்களால் 140 மெகாவோட் மின்சாரமும், காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவோட் மின்சாரமும், சிறிய நீர் மின் நிலையங்களால் 434 மெகாவோட் மின்சாரமும் மற்றும் நீர்மின் நிலையங்களின் ஊடாக ஆயிரத்து 573 மெகாவோட் மின்சாரமும் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படுகின்றன.

தற்போது இன்னும் பல சூரிய சக்தி மின்நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்கத் தேவையான இடங்களை அடையாளம் காணும் பணியை நிலைபெறு தகு வலு அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை இணைப்பதில் ஏற்படும் உறுதியற்ற தன்மையை சமாளிக்க இந்தியாவின் ஊடாக தெற்காசிய மின்சாரக் கட்டமைப்புடன் அதனை இணைக்கத் தேவையான ஆரம்பகட்டச் செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவைதவிர அணுசக்தியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. அதற்கு காலம் எடுக்கும் - என்றார். (எ-44)

# குளத்தின் அணைக்கட்டில் 'குவாரி' விவசாயிகள் போராட்டம்!

வவுனியா, செப். 22

வவுனியா சின்ன விளாத்திக்குளம் குளத்தின் இயற்கையான அணைக்கட்டை உடைத்து கல் அகழ்வுப் பணி இடம்பெறுவதற்கு எதிராக கதிரவேலர் பூவரசன் குளம் கமக்காரர் அமைப்பின் விவசாயிகள் ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குளப்பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கு முன் 'கல்குவாரி' அமைக்கப்பட்டு கல் அகழ்வு இடம்பெற்று வந்த நிலையில் விவசாயிகள் குளத்தின் பாதுகாப்பு மற்றும் விவசாயச் செய்கைக்கு பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து கமநல அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலாளர், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்த நிலையில் கல் அகழும் பணி நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே விவசாயிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதையடுத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்த பொலிஸார், கல் அகழ்வுப் பணிகள் தடுத்து நிறுத்தப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியதை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ம-110)

# கோழைத்தனமான அறிக்கையை மீளப்பெறவேண்டும் கிழக்கு ஆளுநர்

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, செப்.22

அகிம்சைவாதியான திலீபனை நினைவுகூருவது சட்டவிரோதம் என்று கோழைத்தனமாக அறிக்கை விடுத்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர், அந்த அறிவிப்பை உடன் மீளப்பெறவேண்டும். என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வேலுகுமார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அகிம்சை வழியில் போராடி உயிர்த் தியாகம் செய்த திலீபனை நினைவுகூர்ந்து வாகனப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. அதில் பங்கேற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதைத் தடுக்காமல் பொலிஸார் செயற்படும் விதத்தையும் காணொலிகளில் காணக்கூடியதாக இருந்தது.

அரசின் பிரதிநிதியாக இருக்கக்கூடிய கிழக்கு மாகாண ஆளுநர், செல்வராசா கஜேந்திரனின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது என கோழைத்தனமாக அறிக்கை விட்டுள்ளார். ஓர் அகிம்சைவாதியை நினைவுகூர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், வழிமறிக்கப்பட்டு மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு கண்டனம் தெரிவிக்க அவருக்கு முதுகெலும்பில்லை. மாறாக நினைவேந்தலை சட்டவிரோதம் எனக்கூறி கோழைத்தனமாக அறிவிக்கை விடுத்துள்ளார். ஆளுநரின் செயலைக் கண்டிக்கின்றோம். அந்த கூற்றை அவர் மீளப்பெற வேண்டும் - என்றார்.

(எ-44)

## வீதிக்கடவையில்

# பொலிஸாரின் பணி குறைவு

கிளிநொச்சி, செப் 22

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் அதிகமான மாணவர்கள் கற்றல் செயற்பாட்டுக்காகப் பல பகுதிகளிலும் இருந்து பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணித்து வருகின்ற நிலையில் பாடசாலை முன்பாகவுள்ள வீதிக்கடவையில் காலை மாத்திரமே பொலிஸார் கடமைக்கு வருவதாகவும் மதிய வேளை பாடசாலை கற்றல் செயற்பாடுகள் முடிவடையும் வேளை பொலிஸார் வீதிப்பாதுகாப்புக்கடமைக்கு வருவதில்லை எனவும் பெற்றோர் மற்றும் மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ய-113)

# நினைவு ஊர்தி மீது தாக்குதல்: மூதூரில் கண்டன ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, செப்.22

தியாகி திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்து மூதூரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை மூதூர் பாலநகர்ச் சந்தியில் இருந்து புளியடிச் சந்தி மணிக்கூட்டுக் கோபுரம் வரை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-19)




# பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, செப்.22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.நா. சென்று ஜனநாயகம் பற்றிப் பேசினாலும், அவர் தலைமையிலான அரசு நாட்டில் ஜனநாயகத்தை ஒடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ளது என்பதையே புதிய பயங்கரவாத தடுப்பு சட்ட வரைவு காண்பிக்கின்றது. எந்த வடிவிலும் பயங்கரவாத தடைச்சட்டம் தேவையில்லை. அது நீக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் சட்டத்துக்குப் பதிலாக புதிதாக முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான சட்ட வரைவு வர்த்தமானியில் வெளிவந்துள்ளது. பார்க்கையில் இரண்டும் ஒன்றுபோன்றுதான் தெரிகின்றது. புதிய வரைவின் பிரகாரம் ஊடக சுதந்திரத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஜனநாயக விழுமியங்கள் ஒடுக்கப்படுவதற்கான வாய்ப்பை உத்தேச சட்டம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. அடக்குமுறை, மோசமான வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில், ஜனநாக மரபுகளை ஒடுக்கும் செயல் ஏற்புடையது அல்ல.

ஜனாதிபதி அனைத்து இடங்களுக்கும் சென்று ஜனநாயகம் பற்றிப் பேசுகின்றார், ஆனால் புதிய பயங்கரவாத திருத்தச் சட்டம் ஊடாக மீண்டும் அடக்குமுறையை கொண்டுவருகின்றனர். இது எந்த விதத்தில் நியாயம்? புதிய சட்ட வரைவு மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஐ.நா. வலியுறுத்துகின்றது. ஆனால் அதற்கு பதிலாகப் புதிய சட்டம் கொண்டுவரப்படும் என அரசு கூறுகின்றது. எம்மைப் பொறுத்தவரையில் பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படவேண்டும். அதற்கு நிகரான புதிய சட்டம் தேவை இல்லை - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவலைகளில்...



தோற்றம் 02 - 04 - 1944

மறைவு 22 - 09 - 2017

## அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (JP)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை)

ஐம்பத்தொரு வருடங்கள்
அந்நியமாய் வாழ்ந்துவிட்டு
இடையில் எனைத் தவிக்கவிட்டுச் சென்றதென்ன ?
என்றும் பிரியேன் எனக்கூறி
பாசங்கள் பொழிந்து பாரினில்
சிறப்பாய். உயர்வாய் - எனை
வைத்திட்ட உத்தமரே! உன்
பிரிவு தந்ததுயர் ஆறவில்லை! தீரவில்லை
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
உங்களைச் சேரும் நாளை எண்ணி
வாழ்கின்றேன் - இவ்வுலகில்

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்,
உங்கள் ஆருயிர் மனைவி
சின்னாலடி, காரைநகர்

(CS 26319C) (K-1)



யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கட்டட வாடகைக்கான கேள்வி
அறிவித்தல்

01.இலக்கம் 373 பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் திற்குச் சொந்தமான "கூட்டுறவு நகர்" அமைந்துள்ள கட்டடத்தின் ஒருபகுதியான 03 அறைகள் (01 வது அறை நீளம் 12' 08", அகலம் 11', 2வது அறை நீளம் 11' 06", அகலம் 11', 03வது அறை நீளம் 11',அகலம் 11') கொண்ட கட்டடத்தினை வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.

02மேற்படி முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தின் வெளிப் பகுதியின் ஒரு பகுதியான நீளம் 10', அகலம் 09' அளவு கொண்ட இடத்தில் மரக்கறி, பழங்கள் விற்பனை செய்வதற்கு வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.

மேற்படி கட்டடத்தினை பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கங்களுடன் **(0212222587, 0776055558)** அலுவலக நேரத்தில் திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 05 மணி வரையும் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 1.30 மணி வரையும் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 30.09.2023**

விண்ணப்பிக்கும்முறை:- மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் **ரூபா 100.00** இனைச் செலுத்திப் பெற்றுக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கடைக்கட்டடத்தின் ஒருபகுதி வாடகைக்குப் பெறுவதற்கான கூறுவிலை"** எனக் குறிப்பிட்டு **தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இலக்கம் 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு **30.09.2023** திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம்**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து).**

(cs 40609) (N-1)


# சிறுவர் திறன் விருத்திக்கு சிறுவர் சந்தை உந்துசக்தி

முன்னாள் அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் அறிவுத்திறன் விருத்திக்கும் சிறுவர் சந்தைகள் பெரும் பங்காற்றுகின்றன. இதனூடாக அவர்களின் கிரகிக்கும் திறன் விருத்தி அடைவதுடன் எதிர்காலத்தில் தலைமைத்துவ பாங்கும் வளர்க்கப்படுகிறது.

- இவ்வாறு இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய இணுவில் பொது நூலகத்தின் திறன் விருத்தி மையத்தின் அதிபருமான திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை இணுவில் பொது நூலகத்தின் திறன் விருத்தி மையத்தில் சிறுவர் சந்தையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போதுமாறிவரும்சூழலில்எத்தனையோ சிறுவர்களுக்குச் சந்தை என்றால் என்னவென்று தெரியாது. அவர்களைப் பெற்றோரும் கூட்டிச் செல்வதில்லை.

இவற்றைக் கருத்திற்கொண்டு சிறுவர்களுக்கான சந்தை அவர்கள் கற்கும்பாடசாலைகளில்ஏற்படுத்தப்படுகிறது. இத்தகைய சந்தைகள் மூலம் பல உற்பத்திப் பொருள்களை சிறுவர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அவர்களின் கிரகிக்கும் திறன் விருத்தி அடைவதுடன் எதிர்காலத்தில் தலைமைத்துவப் பாங்கையும் வளர்த்து நிற்கிறது.

ஆகவே சிறுபராய மாணவர்களின் திறன் விருத்தியை வளர்த்துக் கொள்வதற்கு சிறுவர் சந்தைகள் அவசியமாகும் - என்றார்.

(ச-20)


# ஆறாம் ஆண்டு நினைவுகளில்...



தோற்றம் 02-04-1944

மறைவு 22-09-2017

## அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (JP)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை)

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
அழியாது நிறைந்து நிற்கும் - எம்குருவே
அழையாத கல்வியை எமக்கு அளித்து
எங்கு சென்றீர் - எம் இறையே!
உம் பிரிவால் வாடுகின்றோம்
வருந்துகின்றோம்
எம்மைத்தேற்ற வந்திருவீர்
தேடியே காத்திருக்கும் உம்
பிரிய மாணவர் நாம்!

உங்கள் பிரிவால் துயருறும்
காரைநகர். உங்கள் பழைய மாணவர்கள்

(CS 26319B) (K-1)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



விண்ணில் 13.09.1945

மண்ணில் 03.10.2022

## அமரர் அரியமலர் இராமநாதன்

திதி: அட்டமி வளர்பிறை (22.09.2023)

ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா!
உங்களை நினைக்காத நொடிகளில்லை

அன்பினால் பண்பினால் நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்
அன்னையின் ஆத்மா இறைபாதம் சரணடைய
பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

077 670 5107 குடும்பத்தினர்




தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகால் சிறுவர் பாதுகாப்பு, நெருக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் பால்நிலை வன்முறை, வீட்டு வன்முறையிலிருந்து பாதுகாத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் கடந்த 12ஆம் திகதி வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்றது.

(ய-9)


## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள வேலித்தூண்கள், பீப்பகள், கோழி வளர்ப்பு உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

077 986 6444



## தேவை

புத்தூரில் இயங்கும்
பூங்கனிச்சோலைக்கு
பெண் உதவியாளர், பூச்சாடி
உற்பத்தி உதவியாளர் தேவை.
சம்பளம் நேரில்.

077 382 9451,076 639 7826


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 02 . 1933



மறைவு 14 . 08 . 2023

கடந்த 14.08.2023 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் சிவபாக்கியம் சதாசிவம்

( சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன்துறை. )

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (23.09.2023) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும், ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவியாக இருந்த அன்புள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"**

219, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்

(cs.52198) (N.1)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 09 . 07 . 1944



மறைவு 23 . 08 . 2023

கடந்த (23.08.2023) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி

**திதி: ஸப்தமி**

மாதமொன்று போன தம்மா
மனத்துயரம் ஆறவில்லை
போதுமிந்த வாழ்வு என்று
போனாயோ எங்கள் அம்மா
நாளும் உந்தன் நினைவில் நெஞ்சம்
நெகிழ்ந்துருகி வாடுகின்றோம்
ஆத்ம சாந்தி வேண்டி என்றும்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.09.2023) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர்

(cs.52199) (N.1)

# பொது அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை 2024ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கான முன்மொழிவுகள் கோரல்**

சபையின் 2024ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகள் வலிகாமம் வடக்கு பிரதேச பொதுமக்களிடமிருந்து கோரப்படுகின்றது. குறிப்பாக பெண்கள், இளையோர், விசேட தேவையுடையோர் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களிடம் இருந்து முன்மொழிவுகள் கருத்துக்கள் எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆர்வமுடையோர் எதிர்வரும் 2023 ஒக்டோபர் மாதம் 06ம் திகதிக்கு முன்னர் பின்வரும் வழிகளின் ஊடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தபால் முகவரி: செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை
கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
மின்னஞ்சல்: vnpskks@yahoo.com
நிகழ்நிலை: vnpskks.my.canva.site

சு.சுதர்ஜன்
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
தொலைபேசி இல: 021 224 1130
22.09.2023

(cr 40607 (N.1)

# ஆறாத ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 02-04-1944



விண்ணுலகில் 22-09-2017

## அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் JP

அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வுநிலை பொறியியலாளர்,
இ.போ.ச. சின்னாலடி, காரைநகர்.

உண்மைகள் உறங்கும் உத்தமனாய்
ஏகலைவர்களுக்குத் துரோணராய்
திக்கறியாதவர்களுக்கு பாதை வகுக்கும் பண்பாளராய்
ஊரும் உறவும் போற்றும் நல்லாசிரியனாய்
இராசாத்தி மனங்கொண்ட இராசமகனாய்
கலங்கி நின்றவர்களுக்கு கலங்கரை விளக்கமாய்
துயருற்றோருக்கு ஞானத்தந்தையாய்
காலத்தால் அழியாத காலபுருஷனாய்
எம் நெஞ்சினில் என்றும் வாழ்வாங்கு வாழ்வீர்
உம் ஆத்மா சாந்தியடை பிரார்த்திக்கின்றோம்.

(CS 26321) (K-1)

பெறாமக்கள்

# காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில்
8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

**077 755 1193**

# ஆறாம் ஆண்டு நினைவலைகளில்



## அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (JP)

(அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வுநிலை பொறியியலாளர், இ.போ.ச.
சின்னாலடி, காரைநகர்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்

உங்கள் பிரிவால் துயரும்

தோற்றம் 02-04-1944 மறைவு 22-09-2017 (CS 26319 A) (K-11)

உங்கள் பாசமிகு
பெறாமக்கள்

## வெளிநாட்டு சிகரெட்டுடன் ஒருவர் கைது!

மன்னார், செப்.22

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஒருதொகுதி வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார், உயிலங்குளத்தில் வைத்து சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்பிட்டியில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்த சிகரெட்டுகள் மன்னாரில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்யப்படவிருந்த நிலையில், மன்னார் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டுள்ளன.


கைது செய்யப்பட்டவர் கற்பிட்டியைச் சேர்ந்த 23 வயதானவர் என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-60-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலிஸ்தான் போராளி

### சுக்தூல் படுகொலை

பதற்றம் அதி தீவிரம்



ஒட்டாவா, செப். 22

இந்தியாவால்தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட காலிஸ்தான் போராளி சுக்தூல் சிங் கனடாவில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதனால் இந்தியா மற்றும் கனடா இடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. இந்தியாவில் பஞ்சாப் மற்றும் அரியாணா பகுதிகளை ஒன்றிணைத்து காலிஸ்தான் என்ற பெயரில் தனிநாடு அறிவிக்கப்பட வேண்டும் என்று தனிநாட்டுப் போராட்டத்தை நடத்திய போராளிகள், பின்னர் கனடாவில் பாதுகாப்புக் கேட்டுத் தஞ்சமடைந்தனர். அவ்வாறு கனடாவின் குடியுரிமையைப் பெற்றுத் தஞ்சமடைந்திருந்த ஹர்திப் சிங் நியார் அண்மையில் கனடாவில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். கனடா நடத்திய புலன் விசாரணைகளில் இந்தியாவே இந்தப் படுகொலையைச் செய்தமை தெரியவந்தது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்த கனடா, இந்தியாவுடனான தூதரக உறவுகளை முறித்துக்கொண்டது. கனடாவுக்குள் புகுந்து கனேடியப் பிரஜை ஒருவரைக் கொன்றமை கனடாவுக்கான அவமானம். கனடாவின் இறைமையை இந்தியா அவமதித்துள்ளது என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார். இதையடுத்து, 'கனடா பயங்கரவாதிகளின் சுவர்க்கபுரியாக மாறுகின்றது' என்று பதிலடி கொடுத்தது இந்தியா. இவ்வாறான பரபரப்புப் பின்னணியில் காலிஸ்தானின் மற்றொரு போராளியான சுக்தூல் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். இந்தக் கொலையையும் இந்தியாவே செய்திருக்கலாம் என்று நம்பப்படும் நிலையில் கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. (ம)




உங்கள் மின் கட்டணத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

மேலதிக வருமானத்தை ஈட்டுங்கள்

வ.வ.வீ. 15% முதல்

மீளச் செலுத்தும் காலம் 8 ஆண்டுகள் வரை

அதிகபட்ச கடன் தொகை ரூ. 250 மில்லியன்

தகுதிபெறும் செயல்திட்டங்கள் -
- வணிக வளாகங்களுக்கு சோலார் பேனல் பொருத்துவதற்கு
- வணிக அளவிலான சோலார் பேனல் திட்டங்களுக்கு
- சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களது வீடுகளின் மேற்கூரையில் சோலார் பேனலை பொருத்துவதற்கு
- மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களுக்கான முதலீடுகள்
- சக்தி சேமிப்பு மற்றும் சக்தி திறன்களை அதிகரிக்கும் திட்டங்களுக்கான முதலீடுகள்
- தேர்ந்தெடுக்கப்பட்ட பசுமை முதலீடுகள்

தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் -
- எந்தவொரு வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ள நபர்கள்
- பதிவு செய்யப்பட்ட வணிக நிறுவனங்கள்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது 011 2 353 333 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுங்கள்

திரிபல பசுமை அபிவிருத்திக் கடன்

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது | Fitch Rating A (lka) | +94 112 353 353 | www.combank.lk

உங்கள் நலனே எங்கள் நோக்கம்




கொக்குத்தொடுவாய்

# மனிதப்புதைகுழி விடயம்: அநீதி இழைக்கப்படலாம்

### ரவிகரன் ஆதங்கம்

முல்லைத்தீவு, செப். 22

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் விவகாரத்தில் அநீதி இழைக்கப்படலாம் என்ற நிலையே காணப்படுகின்றது என்று வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதிகோரி வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று (நேற்று) உலக சமாதான தினமாகும். ஆனால், இலங்கைக்கும் சமாதானத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தில் அநீதி இழைக்கப்படுமோ என்ற நிலையே இப்போது காணப்படுகின்றது. இந்த விடய[illegible] சர்வதேசம் அனு[illegible] தமிழ் மக்களின் கதறல்கள், கூக்குரல்கள், போராட்டங்கள் என அத்தனை விடயங்களையும் கவனித்து தமிழர்களுக்கு நிலையான தீர்வொன்றை சர்வதேசம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

'சனல்-4' ஊடகத்தில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சில விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 300 பேர் கொல்லப்பட்ட அந்தத் தாக்குதல் தொடர்பில் இலங்[illegible] தரப்பினரும் தமது கரிசனையை வெளிப்படுத்தி வருகின்றனர். இதை நாம் புறமொதுக்கவில்லை. இந்த அவதானத்தையும் அது தொடர்பான கருத்துப்பகிர்வுகள் மற்றும் அழுத்தங்களையும் வரவேற்கின்றோம். ஆனால், சுமார் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட விடயத்துக்கு ஏன் நீதி இன்னமும் மறுக்கப்பட்டுள்ளது? ஆதலால், சர்வதேசத்தின் தலையீடே தமிழர்களின் விடிவு. இதை சர்வதேசம் உணரவேண்டும் - என்றார். (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15 - 08 - 1946

இறப்பு 03 - 10 - 2022

பலாலி தெற்கு திக்கம்புரை வசாவிளானை பிறப்பிடமாகவும் புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் மாணிக்கம் கந்தசாமி

**திதி : பூர்வபக்க அட்டமி**

கருணை மிகு உள்ளத்தினால்
கண் போல எமை வளர்த்து
கண்குளிர அனைவரையும்
கபடமற்று உபசரித்து
கல கலக்கும் உங்கள் குரலோசை
கலந்திருந்த எமதில்லம்
கடுகதி வேகத்தில் உம்மை
கவர்ந்து போனான் காலனவன்
கலங்கி நிதம் தவிக்கின்றோம்
கண்குளிர காணவென
கடந்தது ஓராண்டு எனிலும்
கட்டவிழ்ந்து போகாது உம் நினைவு
என்றென்றும் எங்கள் அப்பாவே

(CS 26326 M-1)

குடும்பத்தினர்

2030ஆம் ஆண்டில்

# புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 70 வீதமான மின்னுற்பத்தி!

**ஐ.நா.வில் தெரிவித்தார் ரணில்!**

கொழும்பு. செப். 22

காலநிலை நடவடிக்கைகளில் இலங்கை மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. 2030ஆம் ஆண்டில் இலங்கையில் 70 வீதமான மின்னுற்பத்தி புதுப்பிக்க ஆற்றலைக்கொண்டதாக இருக்கும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது கூட்டத்தொடரில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலநிலை மாற்றம் மற்றும் தொற்று நோய்கள் என்பன இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. எனினும் வல்லரசு நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகள் தங்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. உலகளாவிய ரீதியில் பசி மற்றும் வறுமை நிலை என்பன உச்சத்தில் உள்ளன. உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள வல்லாதிக்க மோதல் பொருளாதார நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. பொருளாதார விநியோகச் சங்கிலிகளை இந்த மோதல் சீர்குலைத்து உலகளாவிய ரீதியில் பணவீக்கம், உணவின்மை, ஆற்றல் விரயம் என்பன ஏற்படக் காரணமாகியிருக்கின்றது.

எனினும், காலநிலை நடவடிக்கைகளில் இலங்கை மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. 2030ஆம் ஆண்டில் இலங்கையில் 70 வீதமான மின்னுற்பத்தி புதுப்பிக்க ஆற்றலைக்கொண்டதாக இருக்கும். வனப்பரப்பில் 32 வீதம் அதிகரிப்பைச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தையும் இலங்கை சடுதியாகக் குறைத்து வருகின்றது. ஆனால், வல்லரசு நாடுகள் இதுவிடயத்தில் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. உலகளாவிய ரீதியில் நிதி அமைப்பை மீண்டும் மறுசீரமைப்பது தற்போது காலத்தேவை - என்றார். (அ-ம)


## யாழ்நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 31/2 பரப்புக் காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் முழுமையாக உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குளி தாபல்நிலையத்திற்கு அருகாமையில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ளது. எதிர்பாக்கப்படும் விலை 55 மில்லியனுக்கு மேலாக எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
- Whatsapp : +447963743585
- மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk-
- Local Contact : 021 222 7141 (Srilanka)

(cs.3214D (N.I)

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 07 . 1947

இறப்பு 15 . 09 . 2023

## திரு.கேசகர் கனகசபை

யாழ்ப்பாணம், கொடிகாமம் கச்சாயைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம், கிளிநொச்சி பரந்தன் குமரபுரம், கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கேசகர் கனகசபை அவர்கள் 15.09.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கேசகர் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேந்திரராணி (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், கவிதா, கஜந்தன், காலஞ்சென்ற கார்த்திகன் மற்றும் யதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவநீதன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவயோகம் கோபாலப்பிள்ளை, ஞானசேகரம் மற்றும் நாகராஜா, சாம்பசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சரஸ்வதி, லக்சுமி, கமலாதேவி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவயோகம், கோபாலப்பிள்ளை, ஞானசேகரம், நாகராசா, சாம்பசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பர்மியா, வியாசிக், கஷ்னி, ருதினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் Markham, ON L3R 5GL இல் எதிர்வரும் (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 (கனடா நேரப்படி) க்கு நடைபெற்று, தகனக்கிரியைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு :**
**கவிதா (மகள்)** +16 477 190 911
**கஜந்தன் (மகன்)** +14 1657 42066
**கரன்** - 076 8584 105

(CS 26329) A-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 29 . 05 . 1960

இறப்பு 20 . 09 . 2023

## திருமதி கமலநாதன் கலாநிதி

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலநாதன் கலாநிதி அவர்கள் கடந்த (20.09.2023) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற செல்லையா செல்வநாயகம் தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்ற செல்லையா கமலநாதன் (கமால்) அவர்களின் பாசமிகு மனைவியும் கீர்த்தனாவின் அன்புத் தயாரும் ஜீவகரனின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற விஜயரூபி மற்றும் சிவலோகநாதன் (கனடா), இன்பம் (கனடா), திரவியம் (கனடா), சாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேந்திரம், எலிசபெத், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கந்தசாமி மற்றும் அன்ரனி காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, யோகம்மா, சண்முகலிங்கம் மற்றும் சந்திராதேவி, இந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உரும்பிராயில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2023) வெள்ளிக்கிழமை இடம்பெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 03.00 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகள், மருமகன்.**
**076 3799 515**
**070 7999 515**

(CS 26328) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபனை...

யாழ்ப்பாணத்தில் திலீபனின் நினைவு நிகழ்வுகளுக்குத் தடைவிதிக்குமாறு கோரி யாழ்ப்பாணப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது.

சட்டச்சிக்கல்கள் நீங்கிய நிலையில் திலீபனின் நினைவேந்தல்களை உணர்வெழுச்சியுடன் நினைவுகூருவதற்கு மக்கள் தயாராகி வந்தனர். இந்த நிலையில் கொழும்பில் இருந்து ஹெலிக்கொப்டரில் வந்த பொலிஸ் சட்டப்பிரிவு பணிப்பாளர் காளிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட அரச சட்டவாதி சுமிந்த விக்கிரம உள்ளிட்டோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று நீண்டநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்தே இந்த மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

திலீபனின்நினைவேந்தல்நிகழ்வுகளால் வன்முறைகள் வெடிக்கலாம் என்பதால் இந்த மனு தாக்கல்செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அத்துடன், வவுனியாவில் திலீபனின் நினைவுப் பேரணியொன்றில் பொலிஸார் ஒளிப்படங்கள் எடுத்ததையடுத்து பேரணியில் கலந்துகொண்டவர்கள் பொலிஸாரை மிரட்டி அந்த ஒளிப்படங்களை அழிக்கச் செய்தமை தொடர்பான வீடியோக்களும் நீதிமன்றின் கவனத்துக்கு பொலிஸாராலும் சட்டமா திணைக்களப் பிரதானிகளாலும் காண்பிக்கப்பட்டது. இந்த மனு மீதான கட்டளை நாளை (இன்று) நண்பகல் வழங்கப்படவுள்ளது. (அ-ம-26)

## வடமாகாண...

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். பொருளாதாரத்தை மேம்படுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கையைத் திரும்பக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியவை. இதேவேளை- வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும். இறுதிப் போரின் பின்னர் மக்கள் மீள்குடியேறி தற்போது நிம்மதியான வாழ்க்கைக்குத் திரும்புவது தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்காலத்தில் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் - என்றார். (அ-ம-26)

## ஒருவர்...

யுள்ள மூவருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்றுப் பகிரங்கப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர். இந்த இரட்டைக் கொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த யுவதி, தாக்குதலாளிகளில் ஒருவரைத் தான் கண்டதாகவும் அவரை அடையாளம்காட்ட முடியும் எனவும் விசாரணையின்போது தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்புக்கு நேற்றுத் திகதியிடப்பட்டிருந்தது. எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த யுவதி நேற்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின்போது தாக்குதலில் ஈடுபட்ட ஒருவரை அடையாளம் காட்டியுள்ளார்.

மேலும், மூன்று சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களைக் கைது செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். குறித்த மூவரும் தலைமறைவாகியுள்ளதால் அவர்களைக் கைதுசெய்ய பகிரங்க பிடியாணை உத்தரவு வவுனியா நீதிமன்றத்தால் நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது. (அ-ம-18)

## போதைப்...

பிரிவு பதில் பொறுப்பதிகாரி பிரதீப் தலைமையிலான குழுவால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

நால்வரிடமிருந்தும் ஒட்டுமொத்தமாக 4 கிராமுக்கு மேற்பட்ட ஐஸ் போதைப்பொருள்களும் இதர போதைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் 19 மற்றும் 20 வயதுடையவர்கள். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## வேட்புமனுக்கள்...

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடைபெறாததால், அந்தத்தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்தவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர், இதனை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். (அ-ம-44)

## தரம் ஒன்று...

கிளிநொச்சி தெற்கு கல்வி நிலையத்துக்கு உட்பட்ட குறித்த பாடசாலையில் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக தரம் ஒன்று வகுப்புக்குரிய பொருத்தமான ஆசிரியர் நியமிக்கப்படாததால் மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் மாணவர்களின் ஆரம்பக்கல்வி பெரும் பாதிப்புக்கு உட்படுகின்றது. குறித்த விடயம் தொடர்பாக ஏற்கனவே வலயக் கல்வித் திணைக்களம் மற்றும் கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோருக்கு முறைப்பாடுகளைத் தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை - என்றனர்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் அதிகாரிகள் குறித்த பாடசாலைக்கு நேற்றுக் களப்பயணம் மேற்கொண்டனர். இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

## சுகாதாரத்துறையினர்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதனா மருத்துவமனையிலும் இதர ஆதார மருத்துவமனைகளிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதாரத்துறை முன்னெப்போதும் இல்லாத வகையில் பலவீனம் அடைந்து செல்லும் நிலையில் அதை மீண்டும் பலப்படுத்த முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும். மருத்துவர்கள் மீது அளவுக்கதிகமான வரிகளை விதித்து மருத்துவர்கள் நாட்டைவிட்டுச் செல்லும் நிலையை இல்லாது செய்யவேண்டும், மருந்துகள் தட்டுப்பாடின்றி சீராகக் கிடைப்பதற்குரிய ஏதுநிலைகளை ஏற்படுத்தவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-20)

## 'திலீபன்...

நாளை முன்னிட்டுத் திலீபனின் வரலாற்றினை எமது அடுத்த சந்ததியினருக்குக் கடத்தும் முகமாக தாயகத்தில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, 'பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!' எனும் தொனிப் பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் இன்று மாலை திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-ம-66,26)

## ஈஸ்டர்...

மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏப்ரல் 4, ஏப்ரல் 20 மற்றும் ஏப்ரல் 21ஆம் (காலைவேளை) திகதிகளில் வெளிநாட்டு புலனாய்வு அமைப்பிடம் இருந்து அப்போது அரசபுலனாய்வுப் பிரிவு பிரதானியாக இருந்த நிலாந்த ஜயவர்த்தனவுக்குத் தகவல் கிடைத்துள்ளது. நிலாந்த ஜயவர்த்தன அப்போது பாதுகாப்பு அமைச்சராகவும், ஜனாதிபதியாகவும் இருந்தவருடன் நாளொன்றுக்கு இரண்டு மூன்று தடவைகள் கலந்துரையாடல் நடத்திவந்துள்ளார். ஒன்று தொலைபேசி உரையாடல் இடம்பெறும், இல்லையேல் நேரடிச் சந்திப்பு இடம்பெறும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அவர் இதனை ஏற்றுக்கொண்டுள்ளார். ஏப்ரல் தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தில் அவர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடைபெறுவதற்கு 4 நாள்களுக்கு முன்னர்கூட அவர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார். இவ்வாறான மிக முக்கியமான தகவல் கிடைத்தும், அது தொடர்பில் அவர் ஏன் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தவில்லை? அவருக்குக் கடும் தண்டனை வழங்கப்படவேண்டும். சிலவேளை அவர் தெரியப்படுத்தியிருந்தால் ஜனாதிபதி அதனைப் பொறுப்பேற்கவேண்டும். இந்தக்காலப்பகுதியில் ஜனாதிபதி (மைத்திரிபால சிறிசேன) செயற்பட்ட விதம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். அவரின் இந்த நடத்தை தாக்குதலுக்கு வழிவகுத்ததா என்பது பற்றியும் ஆராயவேண்டும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் இரு மாதங்களாக பாதுகாப்புச்சபைக்கூட்டம்நடத்தப்படவில்லை. அத்துடன், 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு கூட்டத்தில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் ஒக்ரோபர் 23 ஆம் திகதி முதல் பொலிஸ்மா அதிபருக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பின்னர் பயங்கரவாத விசாரணைப்பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த நாலக சில்வாவை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தனர். சஹ்ரான் தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரி தான் நாலக சில்வா. ஆட்சிக்கவிழ்ப்புச் சூழ்ச்சியும் இடம்பெற்றது. இவ்வாறு பாதுகாப்பை பலவீனப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி மலேசியாவில் இருந்த சுரேஷ் ஷாலே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இதனையும் அப்போதைய ஜனாதிபதி தான் செய்திருக்கக்கூடும். தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு நான்கு நாள்களுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி இந்தியாவுக்கு ஓடினார். அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்றார். தாக்குதல் நடந்த தினத்தில் சிங்கப்பூரில் இருந்துள்ளார். இந்தியாவில் இருந்த காலப்பகுதியில் அவர் நிச்சயம் ஷாலேவைச் சந்தித்திருக்கக்கூடும் என நான் உறுதியாக நம்புகின்றேன். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான இரு சூத்திரதாரிகளில் ஒருவர் இவர் (மைத்திரி), மற்றையவர் கோத்தாபய ராஜபக்ச. நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையிலும் மைத்திரி பொய்யுரைத்தார். இப்படியான ஜனாதிபதி உலகில் வேறு எங்கும் இருந்திருக்கமுடியாது' - என்றார். (அ-ம-44)

## இளைஞர்...

தாயாரின் வீட்டுக்கு வந்திருந்த சிறிதரன் அரவிந்தன் (வயது-27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். தூக்கிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றத்தை விசாரிக்க சர்வதேச நீதிப்பொறிமுறை!

வவுனியாவில் போராட்டம்

வவுனியா, செப். 22

சர்வதேச நீதிப்பொறிமுறையின் ஊடாக இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வவுனியாவில் நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-110)


## ஒப்பந்த காரர்கள் தேவை

யாழ். நாவலர் வீதியில் பழைய வீட்டு கட்டடம் ஒன்றினை இடித்து துப்புரவு செய்வதற்கு ஒப்பந்த காரர்கள் தேவை என்ற ஒப்பந்தம் பூர்தியாகியுள்ளது.

## தைத்த ஆடைகள் விற்பனைக்கு

ஆண்கள், பெண்களுக்கான அனைத்து விதமான தைத்த ஆடைகளை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 076 817 8993
076 817 8997
076 817 8990

**யாழ்ப்பாணம் - சென்னைக்கான விமானப் பயணச்சீட்டுக்கள் இப்போது 56699 /-**

மிகக் குறைந்த விசேட விலையில் கொள்வனவுகளை மேற்கொள்ள இன்றே நாடுங்கள்.

தொடர்புகளுக்கு : APEX TRAVELS

076 3333 644 , 0777 597 598

இல 105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (CS 26330 M-1)

## CHEMISTRY CENTRE CHAVAKACHCHERI

Arasady Junction, Sangaththanai.





செல்வி சி.வைஸ்ணவி
3 A
D.Rank : 9 (JAF)
I.RanK : 132

செல்வி க.தீபிகா
3 A
D.Rank : 5 (KILI)

எமது நிறுவன மாணவர்களின் சித்தி வீதம்

- பௌதிகவியல் - 87 %
- இரசாயனவியல் - 87 %
- உயிரியல் - 89 %
- இணைந்த கணிதம் - 91 %

எமது நிறுவனத்தில் கல்வி கற்று (2022 A/L கணித விஞ்ஞானம்) 3A பெறுபேறுகளைப்பெற்று மருத்துவ பீடத்திற்கு தெரிவான இவ் இரு மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், பல்கலைக்கழகங்களின் ஏனைய துறைகளிற்கு தகுதிபெற்ற மற்றைய மாணவர்களையும்

பாராட்டி வாழ்த்துகின்றோம் நிறுவனச் சமூகம்

(cs.21268) (2.6)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 90 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் ( 300000/=)
* தரகர் தேவையில்லை


தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26260 M-1)


# மரண அறிவித்தல்

## திருமதி லீலிமலர் சின்னப்புநாயகம்

(ஓய்வுபெற்ற பிரதம தாதி உத்தியோகத்தர்)



தோற்றம் 06.07.1934 மறைவு 20.09.2023

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.42. கணேசபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலிமலர் சின்னப்புநாயகம் கடந்த (20.09.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமிநாதர் (பூதர்) எலிசெபத் தம்பதியரின் மூத்த புதல்வியும். காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை சின்னக்குட்டி தம்பதியரின் மூத்த மருமகளும். காலஞ்சென்ற சின்னப்புநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவமலர் மற்றும் வில்லியம் (கனடா). வைத்திய கலாநிதி செல்வரட்ணம் (அமெரிக்கா). காலஞ்சென்ற நவக்குமார் மற்றும் அற்புதமலர் (கணேசபுரம்). அரியம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும். கனகலட்சுமி (கனடா). கீதாஞ்சலி (அமெரிக்கா). சந்தானம் (பிரான்ஸ்). சண்முகப்பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும். காலஞ்சென்றவர்களான அல்பிரேட். சின்னமலர் மற்றும் அருட்சகோதரி யோசேப்பா ஆகியோரின் பாசமிகு சகோதரியும். மரியபாக்கியம். பூராசா ஆகியோரின் அன்புமைத்துனியும். ஜான்சி. சுரேஸ். டயானா. பிரியங்கா. கஜன். அருண். மிதுன். ஹரி. பிரசாத். அஸ்வினி. ஆன்சி. அன்ரூ ஆகியோரின் பாசமிகு பேத்தியும். மார்வின். டானிக்கா. ஜேவின். ஜெக்கப். ஜெனிசன். தக்ஷயா. காய் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2023) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சடங்குத்திருப்பலி இல: 42 கணேசபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று. நாளைமறுதினம் (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசாள் தேவாலயத்தில் ஆராதனை நடைபெற்று. திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லியம் - மகன் - 077 944 8732
மலர் - மகள் - 077 163 2755
செல்வா - மகன் - + 191 030 80196
அரியம் - மகன் - + 447 446 214 631

தகவல்: குடும்பத்தினர்

(cs. 25666) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org